**தூய சக்தி மற்றும் வலையமைப்பு வினைத்திறன் முன்னேற்றச் செயற்திட்டம் - 2018**

தூய சக்தி மற்றும் வலையமைப்பு வினைத்திறன் முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை மின்சார சபை மற்றும் நிலைபெறுதகு சக்தி அதிகாரசபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 மே 08 ஆம் திகதிய எஸ்ஆர்ஜ 43576 ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் 2.09(அ) (ii) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம், மின்சக்கதி மற்றும் புதுப்பிக்கக்கூடிய சக்தி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மின்னசார சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. தூய சக்தி வழங்கலை அதிகரிப்பதுடன் இலங்கையில் மின்சாரத்தை விநியோகிப்பதில் வினைத்திறனையும் நம்பகத்தன்மையையும் முன்னேற்றுதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. செயற்திட்ட நிர்வாகக் கையேட்டின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 25,240 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 16,595.30 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 131.50 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட வெண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 8,644.7 மில்லியன் இலங்கை மின்சார சபையால் நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2013 செப்தெம்பர் 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 யூன் 30 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தி செய்தல் திகதி 2019 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத்

தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்தவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் செயற்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்க ஏற்றவாறு செயற்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு செயற்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக்

கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீடுக் குறைபாடுகள்

| கணக்கீடுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவ பொறுப்புகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பதிவேடுகளின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செய்திட்டத்தால் ரூபா 14,292.75 மில்லியன் தொகை கைதவிர்க்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இலங்கை மின்சார சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் ரூபா 13,962.63 மில்லியன் தொகையான கைதவிர்ப்புகள் மேற்கொள்ளப் பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நடைபெறும் வெலையின் பெறுமதி குறைத்துக் கூறப்பட்டிருந்தது. | முறைப்படி கருத்து தெரிவிக்கப்படவில்லை | சகல கைதவிர்ப்புகளும் உரிய காலத்தில் பதியப்பட வேண்டியதுடன் நெரொத்த பதிவேடுகளுடன் இணக்கம் செய்யப்பட வெண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 7 பகுதிகளின் கீழ் அமுலாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டதுடன் செயற்திட்டத்தின் பகுதி 1 முதல் பகுதி 4 வரை அமுலாக்குவதற்கு இலங்கை மின்சார சபை பொறுப்பாக உள்ளது. செயற்திட்டத்தின் பகுதி 4 இன் கீழான வேலைகள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணிசமானளவு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் பகுதி 1 முதல் பகுதி 3 இன் கீழ் அமுலாக்கப்பட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னெற்றம் மீது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ பொறுப்புகள் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் பகுதி 01 இன் கீழ் முறையில் கட்ட உப நிலைய நிர்மாண வேலைகள் மீதான முன்னேற்றம் வேலையின் நோக்கெல்லையில் செய்யப்பட்ட மாற்றம் காரணமாக, அத்திகதியில் உள்ளவாறு அடைய வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட 76 சதவீத இலக்கைவிட பின்தங்கி 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 42 சதவீதமாக இருந்தது. | உரிய காலத்தில் உரிமையாளர்களிற்கு குறித்த நலன்கள் கிடைத்திருக்கவில்லை. . | கருத்து தெரிவிக்கப் படவில்லை | செயற்திட்ட நடவடிக்கைகளில் இலங்கை மின்சார சபையால் பிரயோகிக்ப்பட்ட கண்காணிப்பு பொறிமுறை வலுப்படுத்த வெண்டும். |
| (ஆ) | துள்கிரியா - கேகாலை, பொல்பிட்டிய - புதிய பொல்பிட்டிய, அத்துருகிரிய - பாதுக்க மற்றும் அத்துருகிரிய - கொலன்னாவ என்பவற்றின் பரிமாற்ற வழிகளின் நிர்மாண வெலைகளின் பௌதீக முன்னேற்றம் 2018 திசெம்பர் 31 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட பொதிலும் 85 சதவீதம் மாத்திரமே அடையப்பட்டிருந்தது. பொது மக்களால் எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள் மற்றும் காணி சுவீகரிப்பு மீதான இழப்பீடு கொடுப்பனவு செலுத்துவதில் தாமதம் என்பவற்றால் உரிய வெலைகள் பூர்த்தியாக்குவதில் மெதுவான முன்னேற்றத்தில் விளைந்திருந்தது. | - மேற்படி- | - மேற்படி- | - மேற்படி- |
| (இ) | புதிய பொல்பிட்டிய கட்ட உப நிலையம், பாதுக்க கட்ட உப நிலையம் என்பவற்றின் நிர்மாண வேலைகள் மற்றும் பன்னிப்பிட்டிய கட்ட உப நியைத்தின் விரிவாக்க வெலைகள் என்பன 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணிசமானளவு பூர்த்தியாக்கப் பட்டிருந்த போதிலும், பாதுக்க ஊடாக புதிய பொல்பிட்டிய முதல் பன்னிப்பிட்டிய வரை பரிமாற்ற வழிகள் பொருத்துலின் கீழான வேலைகள் பொது மக்கள் எதிர்ப்பு காரணமாக 2018 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு வேலைகளை பூர்த்தி | - மேற்படி- | - மேற்படி- | - மேற்படி- |

செய்வதற்கு எதிர்பார்த்த இலக்கினை விட பின்னால் 85 சதவீதத்தில் இருந்தது.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ பொறுப்புகள் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| செயற்திட்டத்தின் பகுதி 04 மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு வெலைகள் இலங்கை மின்சார சபையால் கையாளப்பட்ட சகல கொடையாளர் நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களும் மேற்பார்வைக்கு பொறுப்படைய மேலதிக பொது முகாமையாளரிற்கு (செயற்திட்டங்கள்) பதிலாக இலங்கை மின்சார சபையின் பல்வேறு பிரிவுத் தலைவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. | செயற்திட்டத்தால் பிரயோகிக்கப்பட்ட மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு பொறிமுறை நலிவாக இருந்ததுடன் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கலில் மெதுவான முன்னேற்றத்தை காட்டியிருந்தது. | கவனத்திற் கொள்ளப்பட்டது, 2010 ஆகஸ்ட் 25 இன் சபை தீர்மானத்தின் பிரகாரம், மேலதிக பொது முகாமையாளர் (செயற்திட்டங்கள்) புனரமைப்பு செயற்திட்டங்களை தவிர பரிமாற்ற மற்றும் உருவாக்கல் செய்த்திட்டங்களை மாத்திரம் நிறைவேற்றுவதற்கு பொறுப்புடையது. | செயற்திட்ட நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த மேற்பார்வை மற்றும் கண்காணிப்புகளிற்காக பொறுப்புடைய நபரொருவர் நியமிக்கப்பட வெண்டும். |

### 3.3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ பொறுப்புகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் திகதிய MOFP/ERD/2007/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்து மார்ச் 31 அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2019 மே 08 இலேயெ சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட பிரதான வெண்டுகை பின்னப்றப்பட வில்லை. | செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை மின்சார சபையின் நிதிக்கூற்றுக்கள் இறுதியாக்கும் வரை தயாரிக்க முடியாதிருந்தது. | உரிய திகதிக்கு முன்னர் கணக்காய்விற்காக நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வெண்டும். |
| (ஆ) | செயற்திட்ட உடன்படிக்கையின் 2.09(அ) பிரிவின் பிரகாரம், பேணப்பட வேண்டியிருந்த புறம்பான பேரேட்டுக் கணக்கு செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்களை பதிவதற்கு இலங்கை மின்சார சபையால் பேணப்பட்டிருக்கவில்லை. . | செயற்திட்டத்தின் செலவினத்தை ளிவாக இனங்காண முடியாதிருந்தது டன் கொடுக்கல் வாங்கல்கள் தவறாக பதிதல் மற்றும் | புறம்பான கணக்கேடுகள் மற்றும் நிதிக்கூற:றுக்கள் ஒவ்வொரு கிரய நிலையங்களிலும் பேணப்படுகின்றன. | செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்களை பதிவதற்கு இலங்கை மின்சார சபையால் புறம்பான பேரேட்டுக் கணக்கு பேணப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விடுபடுவதற்கான சாத்தியமுள்ளது. | | |
| (இ) | நிதிப்பிரமாணம் 134(3) இல் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் இலங்கை மின்சார சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் கணககாய்வு செய்யப் பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் உள்ளக கட்டுப்பாடு முறைப்படி அமுலாக்கப்பட்டி ருக்கவில்லை. | கவனத்திற் கொள்ளப்பட்டது, எவ்வாறாயினும், இது நோக்கெல்லையை விட பின்தள்ளியிருந்தது. | வினைத்திறனான மற்றும் ஆக்கபுர்வமான வழியில் செயற்திட்டத்தின் நோக்கெல்லையின் அடைதலை உறுதிப்படுத்தவதற்கு கணக்காய்வை மேற்கொள்ள வெண்டும். |
| (ஈ) | 2016 ஏப்ரல் 29 ஆம் திகதிய PED 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளிற்கு முரணாக, செயற்திட்டமானது அதன் சொந்த நிதிகளிலிருந்து உழைக்கும் போது செலுத்தும் வரியாக (PAYE) ரூபா 36.32 மில்லியன் செலுத்தியிருந்தது. | செயற்திட்ட கிரயம் எதிபாராமல் அதிகரிக்கின்றது. | வழமைபோல, இலங்கை மின்சார சபை ஊழியர்களின் PAYE வரி பொறுப்பு சபையால் செலுத்தப் பட்டிருந்தது. | PAYE வரி ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டும். |